# ஒலிக்கும் யாதவர் முரசு
## Olikkum Yadavar Murasu

Volume: 18 Issue: 10 August: 2023 Bilingual Monthly Price Rs.10/- Annual Subscription Rs.120/-

முரசு: 18 ஒலி: 10 ஆகஸ்ட்: 2023 தமிழ் - ஆங்கிலம் மாத இதழ் விலை ரூ.10/- ஆண்டுச் சந்தா ரூ.120/-

சோபகிருது ஆண்டு ஆடி - ஆவணி மாதம்

| | | | |
|---|---|---|---|
| | உறவுகளோடு<br>இணைவோம் உயர்வோம் | யாதவமே பாரதம்<br>பாரதமே யாதவம் | |




### யாதவ் பவனில் சுதந்திர தின விழா








**YP, YPWT, OYM, YB நிர்வாகிகள் சார்பில் வாழ்த்துக்கள்.**

## குடியரசு தலைவர் பதக்கம்



சென்னை நுண்ணறிவு பிரிவு காவல் உதவி ஆணையர் **திரு ச.சங்கரலிங்கம்** அவர்களுக்கு குடியரசு தலைவர் பதக்கம் வழங்கப்பட்டது.

**YP, YPWT, OYM, YB,**

**நிர்வாகிகள் சார்பில் வாழ்த்துக்கள் .**

## யாதவ் பவனில் மணமாலை நிகழ்ச்சி

**YM / 01 - 01 / 2023**

மாதம் தோறும் யாதவர் மணமாலை
வரன் பார்க்கலாம் வாங்க !!!
இடம் : யாதவ் பவன் எழும்பூர், சென்னை

யாதவர் பேரவை/ ஒலிக்கும் யாதவர் முரசு/ யாதவர் பேரவை நல அறக்கட்டளை சார்பாக சென்னை எழும்பூர் யாதவ் பவன் மாளிகையில் மணமகள், மணமகன் வேண்டுவோர் நலன் கருதி மாதம்தோறும் மூன்றாவது ஞாயிறன்று யாதவர் மணமாலை நிகழ்வு நடை பெறுகிறது.

வரும் செப்டம்பர் மாத மூன்றாவது ஞாயிற்று கிழமை 17/09/2023 காலை 09 மணி முதல் மதியம் 01 மணி வரை நடை பெரும் மணமாலை நிகழ்வில் பங்கு பெற்று பயன் அடையுமாறு கேட்டுக்கொள்கிறோம்

மேற்படி நிகழ்வில்
மணமகள் மணமகன் விபரம் பதிவு செய்தல்
பெற்றோர் சந்திப்பு ,
ஜாதக பரிமாற்றம் ,
மணமகள் மணமகன் சந்தித்தல்
நடைபெறும்
பதிவு கட்டணம் இல்லை

For details contact
Shri. Asokkumar yadav
+91 99943 33283
Yadav Bhavan
+91 94441 34142
044-28191555
( 10am to 05pm )



முரசு 18 ஒலி 10

# ஒலிக்கும்

## யாதவர் முரசு

யாதவர் பேரவையின் செய்தி மாத இதழ்

ஆகஸ்ட் - 2023

பதிவு அலுவலகம்

**யாதவர் பேரவை**
Old No: 16, New No: 33, East Ramanathan Salai,
Egmore, Chennai – 600 031.
Email: yadavarperavai@gmail.com

கல்வி அறியாதவனே இல்லை என்று சொல்லும் காலம் வரவேண்டும் கற்றவனும் கொற்றவன் போல வாழ வேண்டும்.

THE EDITORIAL BOARD

கௌரவ ஆசிரியர்

**டாக்டர். ஆர். காந்தையா யாதவ்**

**M.S. (General)**

ஆசிரியர்

**திரு இரா. ராஜாராமலிங்கம் யாதவ்**

**MA., PGDJMC**

பதிப்பாளர் & அச்சிடுபவர்

**திரு.ஜி. உலகநாதன் யாதவ் MABL**

நிர்வாகம்

**திரு கே. கோதண்டராமன் யாதவ்**

தலைமை நிலையச் செயலாளர்

**ஜி. கே. ஜெய் குமார் யாதவ்**

பொருளாளர்

மணமாலை பகுதி

**திரு கே. அசோக்குமார் யாதவ்**

## நெல்லை யாதவர் பேரவை அலுவலக திறப்பு.



**(12.08.2023)** அன்று காலை 10 மணி அளவில் நெல்லை டவுணில் **டாக்டர் ஆர்.காந்தையா** இல்லத்தில் நெல்லை யாதவர் பேரவை அலுவலக திறப்பு விழா நடந்தது. பின்னர் யாதவர் பேரவை மாவட்டச் செயற்குழு கூட்டம் மாவட்டத் தலைவர் S.ரவிசண்முகம் தலைமையில் நடைபெற்றது. செயற்குழு கூட்டத்தில் நிறுவனத் தலைவர் Dr. காந்தையா, முன்னாள் நிர்வாகிகள் பேராசிரியர் ஐயம்பெருமாள்,சங்கரன், முத்து கிருஷ்ணன் ராமதாஸ், அனந்த நாராயணன், தூத்துக்குடி மூத்த உறுப்பினர் பரமேஸ்வரன், ஒலிக்கும் யாதவர் முரசு ஆசிரியர் ராஜா ராமலிங்கம், யாதவ முன்னேற்ற சங்க செயலாளர் செல்வராஜ், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர்கள் Dr. ராஜகோமதி, வேணி சுபாஷ், அருணாச்சலம் மற்றும் ஹரிஹரன் கலந்து கொண்டார்கள். **புதிய மாவட்ட செயலாளராக ஹரிஹரனும், செயற்குழு உறுப்பினர்களாக Dr. ராஜகோமதி, வேணி சுபாஷ் தேர்வு செய்யப்பட்டார்கள்**. யாதவர் பேரவையின் மாவட்ட துணைத்தலைவர் ராமகிருஷ்ணன்,

ஆலோசனைக் குழு

**திரு ஜி.ஜி. கண்ணன் யாதவ்,**
**YP தலைவர்**
**அரசு. சீனிவாசன் யாதவ்,**
**YP செயலாளர்**
**ஜி.கே.ஜெய் குமார் யாதவ்,**
**YP பொருளாளர்**

ஆசிரியர் குழு
**முனைவர்.பேரா.எஸ்.துரைசாமி**
B. Sc., MBA, P.G.D.R.M., P.G.D.C.A., C.G.T., Ph.D.
Prof. & Research Guide MBA Dept. Vels University, Chennai

**திரு.ச. முத்துக்கிருஷ்ணன்**
B.Sc., MBA (கவிஞர் சமுகி)
கடையநல்லூர், தென்காசி

**திரு.செ.பாரதி**
B.Sc., D.A.E (கவிஞர் பாரதி)
முன்னாள் இராணுவ வீரர், உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை ஆய்வர் (பணி நிறைவு), சென்னை.

**திரு.கு.கண்ணதாசன்**,
M.A.;உதவி இயக்குநர், மாநில அரசுத்தணிக்கைத் துறை, (பணி நிறைவு);காரைக்குடி.

வடிவமைப்பு
**திரு.கோ.சுதர்சன்**

புத்தக ஆக்கம்
**திரு.D. ஸ்டீபன்**

**(Seaman Graphics)**

நல்லாசிரியர் **முனைவர்** S.A. சங்கரன் ஆகியோர் கலந்து கொண்டு ஆக்கபூர்வமான ஆலோசனைகளை, கருத்துக்களை கூறினார்கள்.







அன்புடன்;

- **இரா. ராஜாராமலிங்கம் யாதவ்**

ஆசிரியர்

**நெல்லை அலுவலக முகவரி:**

எண்: 194, வெள்ளம் தாங்கிப் பிள்ளையார் கோயில் தெரு, திருநெல்வேலி டவுன் - 627006

# யாதவர் முன்னேற்ற சங்கம்




**யாதவர் முன்னேற்ற சங்கம் , என் ஜி ஓ காலனி,தி.லி-7 பொதுக்குழு கூட்டம்;**



நமது யாதவ முன்னேற்ற சங்கத்தின் பொதுக்குழு கூட்டம் **(12.8.23)** அன்று மாலை 5 மணி அளவில் தலைவர் **திரு.S.சங்கரன்** அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. சங்கச் செயலாளர் திரு.S.செல்வராஜ் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். சங்கப் பொருளாளர் திரு.S.நந்த கோபாலன் அவர்கள் 22-23 ஆண்டிற்கான தணிக்கை அறிக்கையினை வாசித்தார். மூத்த உறுப்பினர்கள் திரு.தோ.முத்துகிருஷ்ணன் C.E.O.(Rtd), ஆசிரியர்திரு. ராமகிருஷ்ணன், திருமதி.சகுந்தலா, திருN. சங்கரன், திருமதி.ராஜராஜேஸ்வரி மற்றும் வீரவநல்லூர் பண்ணையார் திரு.அருணாசலம் என்ற குமார் ஆகியோர் மறைவுக்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. சங்க உறுப்பினர்கள் திரு.பாலசங்கர் அவர்களின் மகள் செல்வி ஜனனி மற்றும் திரு அழகு தில்லை நாயகம்அவர்களின் மகன் செல்வன் நித்திஷ்ராம் ஆகியோருக்கு எம்பிபிஎஸ் (M.B.B.S )இடம் கிடைத்ததற்காக யாதவர் முன்னேற்ற சங்கம் சார்பாக பொன்னாடை போர்த்தி பாராட்டு தெரிவிக்கப்பட்டது. சங்க மூத்த உறுப்பினர்பேராசிரியர் திரு.,S.ஐயம்பெருமாள் அவர்கள் சங்கத்தின் சிறப்பான செயல்பாடுகளை பாராட்டி பேசினார். சங்கத் தலைவர் திரு.சங்கரன் அவர்கள்சங்க நடவடிக்கைகளை விளக்கி ப்பேசினார் உறுப்பினர்கள் திருவாளர்கள் துரைராஜ் (Ex.கவுன்சிலர்), பாலசங்கர் முதுகலை ஆசிரியர், அழகு தில்லைநாயகம், ரவி சண்முகம் துணைத் தலைவர், முத்துகிருஷ்ணன் Rtd.police Dept, நாகராஜன் BSNL,P.O தாஸ் H.M (Rtd),ராஜா ராமலிங்கம் M.A,ஆசிரியர், ஒலிக்கும் யாதவமுரசு ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். 15.10.23 அன்று இரண்டாம் ஆண்டு விழா நடத்துதல், மருத்துவம் மற்றும்வேலை வாய்ப்பு முகாம் நடத்துதல், சங்கத்தின் காலி மனையில் Shed அமைத்தல், பழைய கட்டிடத்தில் கழிப்பறைகளை சீரமைத்தல் ஆகியவற்றிற்கு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பொருளாளராக திரு எஸ் நந்தகோபாலன் அவர்கள் தொடர்ந்து செயல்பட ஒப்புதல் வழங்கப்பட்டது.





சங்க செயற்குழு உறுப்பினர் திரு துரைராஜ் அவர்கள் நன்றி நவில பொதுக்குழு கூட்டம் இனிதே நிறைவுற்றது. கூட்டத்தில் கலந்து கொண்ட நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் அனைவருக்கும் சங்கத்தின் சார்பாகமீண்டும் நன்றியினை தெரிவித்துக்கொள்கின்றோம்.

இவண், நிர்வாகிகள்,

யாதவர் முன்னேற்ற சங்கம்,

என் ஜி ஓ காலனி, தி.லி-7.

# பொருளாதார இடஒதுக்கீடு

## இங்கர்சால் நார்வே

## தமிழர் ஆய்வுக் கூடம்

**பகுதி – 10**

தமிழகத்தைப் பொருத்தவரை சத்ரியர்கள் உண்மையில் பெறவேண்டியது FC இட ஒதுக்கீட்டின் பங்கைதான். தமிழகத்தில் 45 சதவீதம் மக்கள்தொகையில் வாழும் BC சத்திரியர்களுக்கு 30 சதவீதம்தான் இட ஒதுக்கீடு கொடுக்கப்பட்டுள்ளது. மீதம் இருக்கும் 15 சதவீத BC இட ஒதுக்கீட்டில் உள்ளவர்கள் OC பிரிவில்தான் போட்டியிட வேண்டும்**.**

| Tamil Nadu Caste Groups | | Population % | Reservation % |
|---|---|---|---|
| Backward Classes | **BC** | 46.20% | 30% |
| Most Backward Classes | **MBC** | 20.70% | 20% |
| Scheduled Classes | **SC** | 19% | 18% |
| Scheduled Tribes | **ST** | 1.10% | 1% |
| Others | **OC/FC** | 13% | 31% |
| Total | | 100% | 100% |

பொது பிரிவினர் OC = FC+BC+MBC+SC+ST. பொதுப் பிரிவினர் என்பது அனைத்து சாதியினரும் போட்டியிடக்கூடிய 31% இடம். அது பொதுவானது அந்த 31 சதவீதத்தில், பொருளாதார இட ஒதுக்கீட்டில் 10% உயர்சாதியினருக்கு ஒதுக்கப்பட்டுவிடும். மீதமுள்ள 21 சதவீதத்தில் தான் அனைத்து சாதியினரும் போட்டியிட வேண்டும். 21%ல் 15% மீதமுள்ள BC போட்டியிட்டு வெல்வது என்பது மிகவும் கடினம்.

நாம் அனைவரும் இட ஒதுக்கீட்டை அடைவதற்கு முன்பாக உள்ள கணக்கையே பேசிக்கொண்டு இருக்கிறோம். ஆனால் இட ஒதுக்கீடு நிரப்பப்பட்ட பின் கணக்கெடுத்து பார்த்தால் எப்போதும் OC பிரிவில் பாதிக்கும்மேல், ஏன் 90% FC பிரிவினரால் தான் நிரப்பபட்டிருக்கும்.

சமூகம் சமநிலையில் அடையவே இல்லை என்பதற்கு இந்த OC பிரிவில் 90% FC மக்கள் வெல்வதே சாட்சி தமிழகத்தில் 10 சதவீதத்திற்கு குறைவாக இருக்கும் FC பிரிவினர்களுக்கு 10 சதவீத கட்டாய இட ஒதுக்கீடு என்பது 100% சமூக நீதிக்கு எதிரானது. இங்கு கூறியிருக்கும் 10 சதவீத இழப்பு என்பது சத்திரியர்களுக்கு மட்டுமல்லாமல் எஸ்சி எஸ்டிகும் பொருந்தும்.

**24. நீங்கள் கூறுவது முற்பட்ட சாதிகளில் உள்ள ஏழை மக்களுக்கு அநீதி அல்லவா?**

கண்டிப்பாக இல்லை இட ஒதுக்கீட்டின் மூலம் பொருளாதார ஏற்றத்தாழ்வை சரி செய்வது போல ஒரு பொய்யான பிம்பத்தை காட்டுகிறது அரசு பொருளாதார மேம்பாடு என்பது பள்ளிக்கல்வி இலவசம் கல்லூரிக் கல்வி இலவசம் பள்ளி கல்லூரி மட்டும் அல்லாது தங்களை தனிப்பட்ட முறையில் தங்களைத் தயார் செய்துகொள்ள நீட் பயிற்சி போன்றவைக்கு மானியம் வழங்குவதில் இருக்கிறது.

கல்லூரிகளில் படிக்க உண்டாகும் கட்டணம் அல்லாத பிற செலவினங்களுக்கு அதாவது விடுதி, உணவு புத்தகங்கள் போன்றவற்றுக்கும் அரசு மானியம் வழங்கிட வேண்டும். மாணவர்களுக்கு கல்விக்கடன் அரசு கொடுக்க வேண்டும். அரசுக் கல்லூரிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டும் உருவாக்கப்படும் வேலைவாய்ப்புகளில் ஊதியம் சரியாக நிர்ணயிக்கப்பட வேண்டும்.

சுருக்கமாக சொல்ல வேண்டுமென்றால் அனைத்திலும் இலவசம் என்கிற கல்வித் திட்டமும் அனைவருக்கும் வேலைவாய்ப்பு என்கிற வேலைவாய்ப்புத் திட்டமும் நியாயமான ஊதியம் பெறும் பொருளாதார செயல்பாடுகள் மட்டுமே பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களுக்கு பயன் தரும்

இது போன்ற சலுகைகள் இல்லாத பட்சத்தில், வெறும் உள் நுழைவதற்கு மட்டும் இடஒதுக்கீடு என்றால் அவர்களால் அதனை தொடர இயலாமல் போய்விடும். உதாரணமாக தனியார் கல்லூரிகளில் கட்டணம் 20.000 இருந்தாலும் இதர கட்டணங்கள் என்று ஒரு லட்சத்திற்கு மேல் வாங்குகிறார்கள். பொருளாதாரத்தில் பின் தங்கியவர்கள் இதனை எதிர்கொள்ள முடியாது.

பொருளாதார சமன்பாடு என்பது அரசிடம் இதுவரை இல்லாத கொள்கை அதனை செயல்படுத்த வேண்டும் அதைவிட்டு இட ஒதுக்கீட்டுக்கு எதிர் மனநிலையை உருவாக்கி அதை மேலும் வலுவற்றதாக மாற்றி, குழப்பம் உண்டு செய்து அழிக்கவே இந்த பொருளாதார இட ஒதுக்கீடு என்னும் அர்த்தமற்ற வழியை அரசு திணிக்கிறது மேலும் தனது கையாலாகாத தனத்தை தந்திரத்தால் மறைக்கிறது.

**25. பொருளாதார இட ஒதுக்கீடு தமிழகத்தை நுழையாமல் தடுப்பது எப்படி?**

தமிழக அரசுத் துறைகளில் கிரிமிலேயர் முறை பயன்படுத்துவதில்லை என்பது பாராட்டுக்குரியது ஆனால் இதே நிலை நிலைக்குமா என்றால் அது மிகப்பெரிய கேள்விக்குறியே தமிழக அரசு அதற்கான தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும் ஏற்கனவே 69 சதவீத தமிழக இட ஒதுக்கீடு நீதிமன்றத்தில் இருக்கிறது. இது சற்று ஆபத்தானது அரசு தாமதிக்காமல் வெறும் வெளிநடப்பு எதிர்ப்பு என்ற அடையாள புறக்கணிப்பால் எந்த பயனும் இல்லை ஆளும் அரசு தீர்மானத்தை விரைவில் நிறைவேற்ற வேண்டும்.

**தொடரும்**...

**- டாக்டர் இரா. காந்தையா யாதவ்**

## நெல்லையில் தொடர் யாதவர்கள் கொலை - ஆர்ப்பாட்டம்

**நெல்லையில் தொடர்ந்து யாதவர்கள் கொலை செய்யப்படுவதை கண்டித்து மாபெரும் கவனஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.**

நெல்லையில் இனி எந்த ஒரு யாதவ குடும்பமும் பாதிக்கப்பட கூடாது என்பதற்காக யாதவ சமுதாய அமைப்புகள் ஒன்றிணைந்து
மாபெரும் கவனஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்துகிறோம்.

**மாபெரும் கவனஈர்ப்பு ஆர்ப்பாட்டம்**
**இடம்**: வண்ணாரப்பேட்டை
திருநெல்வேலி
**நாள்** : 18/08/2023
வெள்ளிக்கிழமை காலை 9 மணி அளவில்

அனைத்து யாதவ சொந்தங்களுக்கும் பகிருமாறு கேட்டுக்கொள்கிறோம்.
இது தனி நபர் அல்லது தனி அமைப்பின் பிரச்சனை இல்லை ஒட்டுமொத்த யாதவ சமுதாயத்தின் பிரச்சனை எனவே அனைத்து யாதவ சொந்தங்களும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம் .
போராட்டத்திற்கு கலந்து கொள்ளும் சமுதாயத் தலைவர்களும் மற்றும் போராட்டக் குழு ஒருங்கிணைப்பாளர்களும் (அவர்களின் அனுமதியோடு பெயர் போடப்பட்டுள்ளது ) :

**K.P. வேல்ராஜ் யாதவ் (**நிறுவனத் தலைவர்**)**
அழகு முத்துக்கோன் பேரவை

**கேப்டன் ராஜன் யாதவ் (**நிறுவனத் தலைவர்**)**
அகில இந்திய யாதவர் பாதுகாப்பு பேரவை .

**சிவபெருமாள் யாதவ் (**நிறுவனத் தலைவர்**)**
அகில இந்திய அழகு முத்துக்கோன் மக்கள் கட்சி .

**அபிமன்னன் யாதவ் (**நிறுவனத் தலைவர்**)**
தமிழ்நாடு யாதவர் பாதுகாப்பு பேரவை .

**வேலுச்சாமி யாதவ் (**தலைவர்**)**
சாத்தூர் யாதவர் சங்கம்.

**செந்தூர் மகாராஜன் யாதவ் (**தலைவர்**)**
புதிய மக்கள் தமிழ் தேசம்.

**உடையார்பட்டி ஆறுமுகம் (**ஒருங்கிணைப்புக் குழு**)**

**ADR.ஆனந்தராஜ் (**ஒருங்கிணைப்பு குழு**)**
திருநெல்வேலி

**சுப்புராமன் யாதவ்(**ஒருங்கிணைப்பாளர்**)**
இந்து யாதவ பேரவை

(இன்னும் ஒரு சில தலைவரிடம் பேசிக் கொண்டிருக்கிறோம் அவர்கள் பெயரும் இடம் பெறும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்) (தனிநபர் விருப்பு வெறுப்புகளை தாண்டி அனைத்து யாதவ தலைவர்களும் யாதவ மக்களும் போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்).

தகவல்**;**
**- சுப்புராமன் யாதவ்(**ஒருங்கிணைப்பாளர்**)**

---

**அறிந்துகொள்வோம்**

**<u>நிதிநிலை அறிக்கை (Budget):</u>**

- இந்தியாவில் நிதிநிலை அறிக்கை முதன் முறையாக 7-4-1860 அன்று தாக்கல் செய்யப்பட்டது. அப்போதைய கிழக்கிந்தியக் கம்பெனியைச் சேர்ந்த ஜேம்ஸ் வில்சன் என்பவர் இங்கிலாந்து அரச குடும்பத்தினரிட ம் அதைச் சமர்ப்பித்தார்.

- சுதந்திர இந்தியாவின் முதல் பட்ஜெட் 26-11-1947ல் அப்போதைய நிதியமைச்சர் திரு.R.K. சண்முகம் செட்டியாரால் தாக்கல் செய்யப்பட்டது.

- R.K. சண் முகம் செட்டியார், சி.சுப்பிரமணியம், R.வெங்கட்ராமன், ப. சிதம்பரம், நிர்மலா சீதராமன் ஆகியோர் பட்ஜெட் தாக்கல் செய்த தமிழர்கள்.

**- கு. கண்ணதாசன்,**

**காரைக்குடி .**

## நண்பர்கள் தின சிறப்பு கவிதை

**நட்புறவு!**

பிறந்த போது இல்லாத பெருமைமிகு உறவு
சிறந்து வாழ்நாள் முழுதும் சிங்காரமாய் தொடரும் உறவு
அறம் அறிந்து நல்வழிப் படுத்தும் நல்ல உறவு
புறம் பேசுவோரைப் புறந்தள்ளி பேணும் உறவு

செல்வம் பார்த்து சேர்வது இல்லை இந்த உறவு
இல்லாதவன் கல்லாதவன் கடந்த அன்பு உறவு
இல்லாளுக்கு இணையாக போற்றப் படும் இனிய உறவு
கொல்லும் சொல்லும் உடைக்க இயலா உன்னத உறவு


இன்ப துன்பத்தில் இரண்டறக் கலக்கும் உறவு
வன்மம் தொலைத்து வசீகரம் காட்டும் உறவு
மென்மையே காட்டும் மோதல் வந்த போதும் இவ்வுறவு
நன்மையே ஒற்றை இலக்காய் கொண்ட நல்உறவு

கோப்பெருஞ் சோழன் பிசிராந்தை யார் போல் கண்காணா உறவு
காப்புக் கர்ணன் துரியோதனன் போல் கண்மூடித்தன உறவு
ஏப்பமாய் பசித்த ஏழைக் குசேலனோடு கண்ணன் கொண்ட உறவு
தோப்பையே வேரோடு பிடுங்கும் அனுமன் சுக்ரீவன் தோள் உறவு

விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை கொண்ட வீர உறவு
கட்டியவளிடம் மறைத்ததையும் கள்ள மின்றி பகிரும் உறவு
கிட்டிய வெற்றியில் பங்கு கொள்ள இடம் தரும் உறவு
ஒட்டு மொத்த வாழ்வில் உன்னத இடம் பிடித்த ஓர் உறவு

**-செ.பாரதி**

## நாழிக்கிணறு



**நாழிக்கிணறு:**

திருச்செந்தூரின் அதிசயமாக திகழ்வது நாழிக்கிணறு ஆகும். நாழிக்கிணறு கடலுக்கு மிக அருகாமையில் உள்ளது.

ஆனால், இந்த கிணற்றின் தண்ணீர், நல்ல தண்ணீராக உள்ளது. திருச்செந்தூருக்கு வரும் அனைத்து பக்தர்களும் கடலில் நீராடிவிட்டு, பின்பு இந்த கிணற்று நீரில் நீராடிய பிறகே முருகனைத் தரிசிக்கச் செல்கிறார்கள்.

இந்த செயலுக்குப் பின்னால் உள்ள புராண வரலாறு மிகவும் சுவாரஸ்யமானது. அசுர இனத்தைச் சார்ந்தவர்களான தாரகாசூரனும், சூரபத்மனும் இறையருள் பெற்று தேவர்களை அடிமைப்படுத்தினர். வடக்கே தாரகாசூரனும், தெற்கே சூரபத்மனும் மக்களைக் கொடுமைப்படுத்தி ஆட்சி செய்தனர்.

தேவர்கள் வேண்டுகோளுக்கு இணங்க முருகன் தாரகாசூரனை வீழ்த்திவிட்டார்.

தெற்கே சூரபத்மனை வீழ்த்த திருச்செந்தூருக்கு வருகை புரிந்தார்.

முருகனின் மயில் வாகனமாக இந்திரன் விளங்கினார்.

சூரபத்மனோடு ஐந்து நாட்கள் கடும் போர் நடந்தது. இந்தப் போரில் சூரபத்மனின் படைகளும், அவனது சகோதரர்களும் அழிக்கப்பட்டனர்.

போரின் ஆறாம் நாள் அன்று சூரபத்மன் மட்டும் தனியாக போருக்கு வந்தான். தனது சக்திகள் முழுவதையும் பயன்படுத்திப் போர் புரிந்தான். ஆனால், முருகனின் சக்திக்கு முன்னால், அவனால் எதுவும் செய்ய முடியவில்லை.

இறுதியில் கடலுக்கடியில் உள்ள தனது அரண்மனையில் ஒளிந்து கொண்டான். பின்பு மாமரமாக உருமாறித் தாக்கினான். கார்த்திகேயன் தனது வேலால் மரத்தை இரண்டாகப் பிளந்தார். பத்மாசூரன் உருமாறிய மாமரத்தின் ஒரு பகுதி சேவலாகவும், மற்றொன்று மயிலாகவும் மாறியது. இதற்குப் பின்பே முருகன்,சேவல் கொடியுடனும், மயில் வாகனத்தோடும் காட்சி புரிந்தார்.

போர் முடிந்த பின்பு, தனது படை வீரர்களுக்கு தீராத தாகம் ஏற்படவே, முருகன் தனது வேலால் கிணறு ஒன்றினை உருவாக்கினார். அக்கிணறே நாழிக்கிணறு ஆகும். 14அடி சுற்றளவு கொண்ட இந்த சதுரமான கிணறு அதிசயத்தினுள் ஓர் அதிசயம். இந்த கிணற்றின் நீர் உப்பாகவும் கருகிய நிறத்தில் இருக்கும்.

இந்த கிணற்றின் உள்ளேயே மற்றொரு கிணறு உள்ளது. ஒரு அடி மட்டுமே உள்ள இந்த கிணற்றின் நீர் தெளிவாகவும் மிகவும் சுவையானதாகவும் இருக்கும்.

ஒரே கிணற்றுப் பகுதியில் இருவேறு சுவை கொண்ட கிணறு அமைந்தது அதிசயத்தினுள் அதிசயம் ஆகும்.

இந்த அதிசயத்தை நேரில் காண திருச்செந்தூர் வாருங்களேன்.

**தகவல்;**

**திரு.SP.கோகுலம் சுரேஷ்**

## சர்வம் ஸ்ரீகிருஷ்ணார்ப்பணம்




**ராதேகிருஷ்ணா…**

ஆஹா!!
இப்படியோர் ஓவிய காவியத்தை  பெரிய ஓவியர்களிடமும் காண்கிலேன்
ப்ரேமையிலே மடியிலிட்டு அணைக்கினாறான் ராதிகா ராணியை
ப்ரேம சரணாகதியிலே ஹ்ருதய கமலத்தில் அமர்த்திவிட்டான்
ப்ரேம பக்தி பாவத்திலே சிரசிலே வைத்தும் கூத்தாடுவான் பக்தவச்சலன்
ப்ரேமையில் கிருஷ்ணனும் கூட அனுபவிப்பதை மயக்கும்  கண்கள் காட்டுகின்றதே
ராதாராணி அவனது அணைப்பிலே சின்முத்திரை காட்டுகின்றாள்
ராதேஷ்யாமின் ஹாரத்தை பிடித்து உன்னை அலகிலேன் என்கிறாள்
ராஸலீலையிலே மகிழ்ந்து மதுவனத்திலே ஊஞ்சலாடுகின்றாள் அன்போடு
ராதாகிருஷ்ண தத்துவம் பூரண சரணாகதி தத்துவம்
ராதாகிருஷ்ண கல்யாணம் போல் வைபவமும் காணமுடிகின்றது
அழகிய பீதாம்பரதாரி ராதேஷ்யாமளன்
அன்பாய் வாத்சல்ய ப்ரேமையோடணைக்கின்றான்
ஆனந்த ஜூலாவிலே புலித்தோல் பாதத்திலே ஷோபிக்கின்றது
ஆனந்த லாலு ஊஞ்சல் பாட்டு பாடுவோம் இந்த கற்பனைக்கெட்டாத காட்சி கண்டு.
சர்வம் ஸ்ரீகிருஷ்ணார்ப்பணம்.

நன்றி!
**-திரு. பா.ஹரி ராமன் யாதவ்**



HQ.Secretary

**தலைமை அலுவலக நிர்வாகம் வரவு செலவு கணக்குகள்.**

**July to August 2023**

**HQ.Sec Mr. Kothandaraman Yadav, Cell: 94440 50110**

**Treasurer Mr. Jaikumar Yadav , Cell:93810 63565**



Treasurer

## Receipts

| S.No | Name | Receipt Book No. | Receipt Voucher No | Amount (Rs) | Date | Payment |
|---|---|---|---|---|---|---|
| 1. | S.Xavier | | | 120 | 10/07/2023 | OYM |
| 2. | M.Marimuthu | | | 120 | 10/07/2023 | OYM |
| 3. | P.Vairakannu | | | 120 | 10/07/2023 | OYM |
| 4. | M.Magalingam | | | 120 | 10/07/2023 | OYM |
| 5. | E.Bahadoor Ramiah | | | 120 | 18/07/2023 | OYM |
| 6. | A.Chinnasamy | | | 120 | 18/07/2023 | OYM |
| 7. | E.Radhakrishnan | | | 120 | 18/07/2023 | OYM |
| 8. | R.GomathiSankar | | | 120 | 18/07/2023 | OYM |
| 9. | A.Shankar kumar | | | 120 | 18/07/2023 | OYM |
| 10. | R.Kumar | | | 120 | 07/08/2023 | OYM |
| 11. | P.Ekanthanyadav | | | 120 | 09/08/2023 | OYM |
| 12. | T.Lingadurai | | | 120 | 11/08/2023 | OYM |
| 13. | R.Ramakrishnan | | | 120 | 17/08/2023 | OYM |
| 14. | K.Ramachandran | | | 120 | 18/08/2023 | OYM |

**OYM**: Olikkum Yadavar Murasu.

**அடுத்த இதழில்:**

வரலாற்றில் யாதவ பிரமுகர்கள் வரிசையில் சில ஆன்றோர்கள் பற்றிய செய்திகள் இடம்பெ று ம்.

\- ஆசிரியர்

## மனிதம் மாறிப்போனது

அள்ளிச்செண்டு ஒன்று
தன் அழகிய கை கொண்டு
மல்லி பூச்சரத்தை அளக்குது
அதை காணும் கண்களை எல்லாம் இழுக்குது

பச்சிளம் பிள்ளையின்னு
பத்திரமா வீட்டுக்குள்ள
பாத்துக்கிட்ட காலம்
மலை ஏறுது

பணம் காசு சம்பாதிக்க
பாழும் வயிறு
கூழ்குடிக்க
பாதி உசுரு வீதியில்
வாழுது

இந்தப் பாரதத்தில்
மனிதம் மாறிப்போனது
அதை நினைக்கையில
மனசும் வாடி போகுது

ஆக்கம்
க.ஆ.மகாலட்சுமி
மடிப்பாக்கம்
சென்னை.



## புதிய ஆசிரியர் குழு உறுப்பினர்



**திரு.கு.கண்ணதாசன்,M.A** அவர்கள் உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையில் பணி புரிந்த போது “ஆய்வர் மடல்” என்ற “Home Journal”ல் இணை ஆசிரியராக பணி புரிந்தார். நமது ஒலிக்கும் யாதவர் முரசு ஆசிரியர் குழுவிற்கு அவரது வரவு நல்வரவாகட்டும்.

**-** ஆசிரியர்

## பிறந்த நாள் வாழ்த்துகள்



ஆகஸ்ட் 17, அன்று பிறந்த நாள் காணும், சென்னையின் துணை **மேயர் திரு M.மகேஷ் குமார்** அவர்களுக்கு இனிய பிறந்த நாள் நல்வாழ்த்துகள்...!

2001 ம் ஆண்டு சென்னை மாநகராட்சி தேர்தலில் சொற்ப வாக்கு வித்தியாசத்தில் வெற்றி வாய்ப்பை இழந்தவர்...!!

2006ம் ஆண்டு நடந்த மாநகராட்சி தேர்தலில் வெற்றி பெற்றார், சென்னையில்!!

2011ம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் தலைவர் கலைஞர் அவர்களது ஆதரவை பெற்ற சைதை மகேஷ் குமார் அவர்களுக்கு, திமுக கழகம் சைதாபேட்டை தொகுதியை வழங்கியது, மிக சொற்ப வாக்கு வித்தியாசத்தில் மகேஷ் குமார் அவர்கள், அதிமுக வேட்பாளரிடம் வெற்றி வாய்ப்பை இழந்தார்...!!

தன்னம்பிக்கையோடு 2022ம் ஆண்டு நடைபெற்ற மாநகராட்சி தேர்தலில் சென்னையில் 169வது வார்டில் களம் கண்டார்.... மாபெரும் வெற்றியை எட்டினார்...!

நமது முதல்வர் அவர்களின் ஆதரவோடு மகேஷ் குமார் அவர்கள், சென்னையின் துணை மேயராக தேர்ந்தெடுக்கப்பட்டார்....!!!

சைதை பகுதியில் திமுகவில் ஒரு மாபெரும் கூட்டம் தயார் செய்ய வேண்டுமென்றால் அது சைதை மகேஷ்குமார்தான்...!

திமுகவின் தலைமை செயற்குழு உறுப்பினராகவும் இருந்து வருகிறார்...!!

1964ல் சென்னை மாநகராட்சியின் மாமன்ற உறுப்பினராகவும்!!

1967ம் ஆண்டு சென்னை மாநகர துணை மேயராகவும் இருந்த ஐயா **சி.பி.பவளவண்ணன்** அவர்களது மருமகன், சைதை **மகேஷ் குமார்** அவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.....!!!!

பாரம்பரிய குடும்பத்தில் இருந்து வந்தவர் சைதை மகேஷ் குமார் அவர்கள்...!

தமிழ்நாடு யாதவ மகாசபையின் முன்னாள் தலைவர் **Dr M.கோபாலகிருஷ்ணன்** அவர்களிடத்தில் பெரும் நன்மதிப்பை பெற்று இருந்தவர் சைதை மகேஷ் குமார் அவர்கள்....!!!

தயங்குபவர்களுக்கும், பயப்படுபவர்களுக்கும், யோசிப்பவர்களுக்கும் இந்த உலகில் எதுவும் சாத்தியமில்லை... துணிவும், முயற்சியும் தான் வெற்றியின் முதற்படி!

துணிந்து தன்னுடைய தன்னம்பிக்கை எனும் பேராயுதத்தால் வெற்றி கொடி நாட்டி இன்று துணை மேயராகி இருக்கிறார் சைதை **மகேஷ் குமார்** ...!

அனைத்து மக்களின் பெரும் நன்மதிப்பை பெற்றவர் நமது துணை மேயர்..!!

17.08.2023 அன்று பிறந்த நாள் காணும் சென்னையின் துணை மேயர் திரு M.மகேஷ் குமார் அவர்களுக்கு இனிய பிறந்த நாள் வாழ்த்துகள்..!

அரசியலில் இன்னும் பல சாதனை படைக்க ஸ்ரீ கிருஷ்ணர் அருள் புரிய வேண்டுகிறோம்....!!

வாழ்த்தி மகிழும்...!!

நன்றி !

**திரு.சந்திர சேகரன் விளாங்கார்,**

**YP,**
**YPWT,**
**OYM,**
**YB,**

**நிர்வாகிகள் சார்பில் வாழ்த்துக்கள்.**

## இராவணன் கேட்ட தட்சணை!

ராமனின் பாதம் பட காத்திருந்தது அந்த புத்தம் புதிய சேது. காரியம் முடிந்த களைப்பில் ஓய்வெடுத்து கொண்டிருந்த வானர சேனையை பெருமையோடு நோக்கினான் ராமன்.இச்சிறப்பு மிக்க சேது பாலத்தை துவக்கி வைக்க சிவ பூஜைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும், வேண்டியனவற்றை தயார் செய்ய பணித்தார்.

ராமனின் விருப்பமறிந்த ஜாம்பவான் இத்தகைய சேதுவை துவக்கி, சிவ பூஜை செய்து வைக்க மிகச்சிறந்த பண்டிதர் அவசியம் என்றுரைத்தார்.

அப்படி யாரேனும் அருகே உள்ளனரா என்ற ராமனின் கேள்விக்கு, ராவணன் ஒருவனே என்று தயக்கத்துடன் பதிலளித்தார் ஜாம்பவான். பதிலைக் கேட்ட ராமனின் இதழோரம் புன்னகை அரும்பியது!

பிறகென்ன யோசனை. நமது வேண்டுகோளுடன் அனுமனை அனுப்புங்கள். இப்பூஜையை சிறப்புற நடத்தி தர அப்பண்டிதரையே வேண்டி வரவழைத்து வாருங்கள்.

விரோதியின் தேசத்தை அடையும் வழிக்கு அவனை வைத்தே பூஜையா? இது நடக்குமா!? அதிர்ச்சியில் ஆழ்ந்தனர் சுக்ரீவனும் அவனின் சேனைகளும்!

ராமனின் விருப்பமறிந்த வாயு மைந்தனை தடுக்க முடியுமா? இமைப்பொழுதில் இலங்கை அரண்மனையில் நின்றார் அஞ்சனை மைந்தன். அரக்கர்கள் சூழ்ந்தனர், இலங்கையை தீக்கிரையாக்கியவன் திரும்பி வந்ததுள்ளானே!? அரக்கர்களே சண்டையிட வரவில்லை. சிவ பூஜை செய்து வைக்க உத்தமமான சிவ பக்தன் ராவணனை நாடி வந்துள்ளேன்.

தன் முன்னால் நிற்கும் அனுமனின் கோரிக்கையை கேட்டு வியந்தது ராவணனோடு அவனது சபையும்! இது சூழ்ச்சி என்றனர் சபையோர்.

சூழ்ச்சியால் தங்களை வெல்ல இயலுமோ? தயை கூர்ந்து எங்கள் வேண்டுகோளுக்கு செவிசாய்க்க வேண்டும் என்றார் அனுமன்.

அச்சமும் ஆவேசமும் திகைப்பும் கூடி எழுந்து நின்று அனுமனை நோக்கி கூச்சலிட்டவர்களை கைகாட்டி அமர செய்து, இந்த வேள்வியை நடத்தித்தர ஒப்புக் கொண்டான் சிறந்த சிவ பக்தனான ராவணன்.

வேத சாஸ்திரங்களை கரைத்துக் குடித்த இப்பண்டிதனுக்கு எப்படி இப்படி ஒரு கீழ்த்தரமான எண்ணம் ஏற்பட்டது? என பூஜை நடத்தி தர வந்த ராவணனை பார்த்து ராமனும், சங்கு சக்கரங்கள் மட்டும் இவனது கரங்களில் இருந்தால் விஷ்ணுவாகத்தான் இவன் தோன்றுவான் என ராவணனும் எண்ணினர்.

பூஜை ஏற்பாட்டில் ஏதேனும் குறை இருந்தால் பகிரவும் என்ற ராமனின் கோரிக்கைக்கு, தசரத மைந்தா! ஏற்பாடுகள் நேர்த்தியாக உள்ளது. ஆனால் துணைவியின்றி கிரஹஸ்த்தன் செய்யும் எந்தக் காரியத்தையும் சாஸ்திரங்கள் அங்கீகரிப்பதில்லை என்று பதிலளித்தார் இலங்கேஸ்வரன்.தாங்கள்தான் வேள்வியை சிறிதும் குறைவின்றி நடத்தி தர வேண்டும் என்றார் ராமன்.

சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்த ராவணன், பூஜைக்காக சீதாவை (பூஜை முடியும் வரை உங்கள் இருவருக்கும் இடையே எந்த பேச்சுவார்த்தையும் கூடாது, மேலும் பூஜை முடிந்த மறுகணமே சீதையை அழைத்து சென்று விடுவேன் என்ற நிபந்தனையுடன்) வரவழைத்தார்.

ராவணனிடம் வினவினார் ராமன்.

சொல்லொணா வியப்பில் ஆழ்த்தும் இப்பூஜையை நடத்திக் கொடுத்ததற்காக தட்சணையை தயைகூர்ந்து தெரியப்படுத்த வேண்டும் என்று கைக்கூப்பியவண்ணம் ராமன் கேட்க பண்டிதரான இராவணன் அதற்கு தணிந்த குரலில், ராம பிரானுக்கு மட்டுமே கேட்கும் படி, பதில் அளித்தான்.


"என்னை பண்டிதராய் மதித்து சிவ பூஜை செய்ததற்கு நன்றி! மேலும் சிவ பூஜைக்கு நான் தட்சணை வாங்குவதில்லை. தட்சணை தராததால் பலன் கிட்டாது என்று நீ எண்ணக்கூடும். யுத்தத்தில் ஒருவேளை நான் தோல்வியுற்று என் உயிர் பிரிய நேர்ந்தால் அத்தருணத்தில் நீ என் அருகில் இருக்க வேண்டும். இது மட்டும்தான் நான் எதிர்பார்க்கும் #தட்சணை!" என்றான் சகல வேதங்களையும் சாஸ்திரங்களையும் கற்றுத் தேர்ந்த இலங்கேஸ்வரன்!?

(மூலம்: வேதவியாசர் ராமாயணம்)

**- இரா. ராஜாராமலிங்கம் யாதவ்**

---

## முதல் சமூக நீதி போராளி



**ஆகஸ்ட்7 பிற்படுத்தப்பட்ட மக்களின் வாழ்வில் விளக்கேற்றிய தினம் இன்று**...

- சுதந்திர இந்தியாவின் முதல் சமூக நீதி போராளி பி.பி.மண்டல் யாதவ்
- மறைந்த மரியாதைகுரிய திரு.வி.பி.சிங் பிரதமராக இருந்தபோது திரு.மண்டல் யாதவ் கொடுத்த பிற்படுத்தப்பட்டோர் ஆய்வு அறிக்கையை பாராளுமன்றத்தில் பலரின் எதிர்ப்புகளுக்கிடையே 07.08.1990 அன்று நிறைவேற்றினார்!!
- இதன் விளைவாக வி.பி.சிங் தனது ஆட்சியை இழந்தார் என்பது வரலாறு !!
- சமூக அங்கீகாரம், கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் உரிமை மறுக்கப்பட்டு இருட்டில் வாழ்ந்த பிற்படுத்தபட்டோருக்கு வெளிச்சம் கிடைத்த நாள் ஆகஸ்ட் 7 !!!

நன்றி!

**திரு வெற்றிவீரன் யாதவ்**

# சுதந்திர தின வாழ்த்துகள்



அனைத்து உறவுகளுக்கும் இனிய சுதந்திர தின நல்வாழ்த்துகள்..!!
இந்தியாவின் முதல் விடுதலை வீரன், மாவீரன் அழகுமுத்துக்கோன் தொடங்கி....!
எண்ணற்ற யாதவ சமூக போராளிகள், தியாகிகள் இன்று நாம் சுதந்திர காற்றை சுவாசிக்க
தூக்கு கயிறுக்கும், துப்பாக்கி தோட்டாக்களுக்கும், சிறைச்சாலையின் கொடுமைக்கும்
உயிர் தியாகமும், கொடுந்தண்டனையும் அடைந்து இருக்கின்றனர்...!!
யாதவர் சமூகத்தில் பல்வேறு தியாகிகள் சுதந்திர போராட்டத்தில் கலந்து கொண்டு
இருப்பது பலரும் தெரியாத வரலாறு..!
அனைவரையும் இந்த நாளில் தெரியப்படுத்துவது நமது கடமை..!!
மாவீரன் அழகுமுத்து கோன்
(இந்தியாவின் முதல் விடுதலை வீரன்)
சின்ன மாவீரன் அழகுமுத்து கோன்
சிங்கமுத்து சேர்வை
லொக்கம்பட்டி சடைக்குட்டி சேர்வை
தியாகி தஞ்சை திரு பெ.வீரப்பிள்ளை.....!!!
தியாகி அமரர் என்.கோவிந்தசாமி பிள்ளை...!!
தியாகி பண்ணுருட்டி கோவிந்தசாமி பிள்ளை....!!
தியாகி கோவை கே.பி.திருவேங்கடம்...!!!
தியாகி வே.கி.குப்புசாமி பிள்ளை....!!
தியாகி வேலூர் கேசவமந்திரி...!!!
தியாகி வேலூர் கிருஷ்ணமந்திரி...!!
தியாகி கோவில்பட்டி கோபாலகிருஷ்ணன்...!!
தியாகி சட்டநாத கரையாளர்...!!
தியாகி, இராதாகிருஷ்ண பிள்ளை.

**YP, YPWT, OYM, YB**
**நிர்வாகிகள் சார்பில் வாழ்த்துக்கள்.**

## வரலாற்றில் யாதவ பிரமுகர்கள்

திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் போட்டியிடுவதற்கு முன்பே 1955 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் சுயேட்சையாக களம் இறங்கி வெற்றி பெற்ற நகர்மன்ற உறுப்பினர் திரு பொ.பத்மநாபன்.

இந்த ஆண்டு **திரு** பத்மநாபன் நூற்றாண்டு விழா. 1955-1975 வரை தொடர்ந்து நகர்மன்ற உறுப்பினர். அவர் சட்ட மன்ற உறுப்பினராகவும் சேர்ந்து பதவி வகித்தார்.

நகர்மன்ற தலைவராக வெற்றி பெற போதிய அளவு உறுப்பினர்கள் இவர் பக்கம் இருந்தும் தலைவர் வேண்டுகோளுக்கு இணங்க அதை விட்டு கொடுத்தார். அவரது நூற்றாண்டில் அவரை நினைவு கூர்வோம்.

நன்றி **!**

நல்லாசிரியர் முனைவர்;

**S A சங்கரன் யாதவ்,** பட்டதாரி ஆசிரியர் - திருநெல்வேலி 7010392942.

## யாதவர் பேரவை அலுவலகம் இடம் மாற்றம்




**YP புதிய முகவரி மேலே குறிபிட்டபடி ;**

**வேலை நேரம்: காலை**: 9 மணி

முதல்

**மாலை**: 5 மணி வரை .




# மணமாலை

## மணமகள் விபரம்




| பெயர்-படிப்பு-தொழில் | நட்சத்திரம் | ராசி | தந்தைபெயர் | தொலைபேசி |
|---|---|---|---|---|
| K.ரேவதி, **B.com, BA** BNY Melon, (DLF Campus) | சுவாதி 17.03.1998 | துலாம் | P.கிருஷ்ணமூர்த்தி சென்னை | 9884305201 |
| S.ஹேமமாலினி **M.Sc.,** Data Entry Operater | பூசம் 10.02.1998 | கடகம் | D.சீனிவாசன் சென்னை | 93800 46432 |
| H. அக்ஷயா கிருஷ்ணன் (MBA (Shiping and ort Management) IN - Patient Billing (Apollo Hospital) | கார்த்திகை 25.08.1997 | ரிஷபம் | G. அரிகிருஷ்ணன் வேளச்சேரி | 9444973852 |
| S.விஷ்னுப்ரியா BSPA (BITS University) A Embryologist in Anova Fertility & Reproductive Heath, Toronto, Ontario, Canada | மகம் 3ம் பாதம் 03.04.1993 | சிம்மம் | S.சுப்ரமணியன் | 9444939883 9677219654 |
| K.விசாலி DCA HDFC | ரோகினி 29.07.1997 | ரிஷபம் | M.கிருஷ்ணமூர்த்தி சென்னை | 9841504512 |
| திவ்யா MA Socialogy | விசாகம் 02.08.1998 | | S. செல்வராஜ் அரியலூர் | |
| P. ரோகினி B.Com | சுவாதி 19/04/2000 | துலாம் | பன்னீர் செல்வம் சென்னை | 6385103789 7418362887 |
| N. பிரியதர்சினி, 10th | மூலம் 15.01.1999 | தனுசு | நர்குணன் திருப்பத்தூர் | 6382734980 |
| Dr. R.B. தாரகேஸ்வரி MBBS | சுவாதி 29.06.1993 | துலாம் | பாலாஜி செங்கல்பட்டு | 8680097440 9840359593 |
| R. கீர்த்தனா B.E | அவிட்டம் 24.04.1995 | | ராமசந்திரன் | 9443333285 |
| S. பூர்ணிமா (A பிரியங்கா BCA, MBA (Corres) Capgemini Technology Service India Ltd | அஸ்தம் 18.03.1995 | கன்னி | சேகர் சென்னை | 8939210352 7708907788 |
| M. வித்யா பெனோ B.Tech in Information Technology, Capgemini Technology Service India Ltd, Chennai. | மகம் 21-05-1991 | சிம்மம் | முத்துகிருஷ்ணன் திருநெல்வேலி | 9150119371 9150119381 |
| T. மதுமதி B.Sc, B.Ed | மகம் 06-10-1999 | சிம்மம் | திருநாவுக்கரசு சென்னை | 9841816665 7358229982 |
| G. சௌந்தர்யா, B.E, C.SC Data Designer, Comcast, Chennai | அவிட்டம் 4ம் பாதம் 14-09-1989 | கும்பம் | குணசேகரன் சென்னை | 7397356853 |
| T.நித்யா, BE, MBA HR Recrutier, Guees Corp. Company, Chennai | அனுஷம் 22-05-1997 | | தமிழ்ச்செல்வம் சென்னை | 9600063759 9444911234 |
| S. ஹரிணி BE (CSc), IT Company, Chennai. | திருபோனம் 11/07/1998 | மகரம் | ஸ்ரீனிவாசநரசிம்ஹன் சென்னை | 9444901045 9445140163 |
| P. பிரியா B.Sc ( Microbiology), M.Sc, M.phil (Biotechnology) | மூலம் 17/08/1994 | தனுசு | R. பெருமாள் சென்னை | 9840053713 |
| R. சுபஸ்ரீ M.Sc. | திருவாதிரை 01.11.1996 | மிதுனம் | K. ராமசாமி மதுரை | 9841607311 |




மணமாலை

